SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

THIRD YEAR EXAMINATION IN BACHELOR OF BUSINESS ADMINISTRATION / COMMERCE (EXTERNAL) – 2009 / 2010 - HELD IN DECEMBER – 2010

BBA / COM 37 (II) – TAXATION

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. (i) தற்போது இலங்கையில் நடைமுறையில் இருக்கும் வரிச்சட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் சந்தர்ப்பங்களுக்கான உமது அபிப்பிராயத்தைக் குறிப்பிடுக.

(அ) திருமதி நடேஸ் ஒரு பலசரக்குக் கடையொன்றினை தனது வீட்டுடன் இணைந்த ஒரு கட்டடத்தில் நடாத்திக் கொண்டு வருகின்றாள். அவளின் கணவரும் 19 வயதுடைய மகனும் அக்கடையில் வேலை செய்கின்றனர். வியாபார இலாபத்தை கணிப்பீடு செய்கையில் தனது கணவருக்கும், மகனுக்கும் செலுத்திய சம்பளங்களை செலவாக வியாபார இலாபத்தில் இருந்து கழிக்க முடியுமா?

(05 புள்ளிகள்)

(ஆ) திரு ராஜன் ஓய்வூதியப் பணிக்கொடையாக ரூபா 2000,000 யையும் பங்குலாபமாக ரூபா 200,000 யையும் பெற்றுள்ளார். இவை அவரின் வரிக்கு உட்படுத்தப்படுமா?

(05 புள்ளிகள்)

(ii) இலங்கை வரிச்சட்டத்தில் தனிநபர் வரி கணிப்பீடு தொடர்பாக குறிப்பிடப்பட்ட பின்வரும் சொற் தொடர்களை விளக்குக.

(அ) வதிவுள்ள தனி நபர்

(ஆ) கணவன் அல்லது மனைவி, மற்றும் பராயமடையாப் பிள்ளை

(02 x 05 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

02. திரு தயானந்தா வரையறுத்த அல்லி பொதுக்கம்பனியின் நிறைவேற்று பணிப்பாளராகக் கடமையாற்றுகின்றார். அவரின் மாதாந்த சம்பளம் ரூபா 150,000 ஆகும். கம்பனி அவருக்கு வாடகையின்றி வீடு ஒன்றை வழங்கியுள்ளது. இந்த வீட்டின் ஆண்டுப் பெறுமதி ரூபா 120000 வும் வீதி வரி 30% ஆகும். கம்பனி இந்த வீட்டுக்கு ரூபா 35000 ஐ வாடகையாகச் செலுத்துகின்றது.

திரு தயானந்தாவின் மனைவி ஒரு பலசரக்குக் கடையினை நடாத்திக் கொண்டு இருக்கின்றார். வர்த்தக நடவடிக்கைக்கு பயன்படுத்துவற்காக ஒரு கட்டடத்தை ரூபா 600,000 செலவில் கட்டி முடித்துள்ளார். ஆனால் அந்த கட்டடம் இன்னும் வியாபாரத்தில் பயன்படுத்தப்படவில்லை. வியாபாரம் காரணமாக ரூபா 160,000 யை குறித்த ஆண்டின்போது பெற்றுக்கொள்கின்றார். வியாபர இலாபம் பெறப்படும் போது பின்வரும் செலவினங்கள் கழிக்கப்பட்டன.

வாகனப் பெறுமானத் தேய்வு ரூபா 30,000 (அவர் அந்த வாகனத்தை 10.10.2007 இல் ரூபா 600,000 இற்கு கொள்வனவு செய்துள்ளார்) மோட்டார் போக்குவரத்து தண்டப் பணம் ரூபா 15000 இனைச் செலுத்தியுள்ளார். வாடிக்கையாளருக்கு

கலண்டர்கள் அச்சிட்ட செலவு ரூபா 8000 ஆகும். மேலும் அறவிடமுடியாக் கடனாக ரூபா 10000 இனை பதிவளித்துள்ளார்.

திரு தயானந்தாவுக்கு கிடைக்கும் ஏனைய சலுகைகளாக கம்பனியினால் ஒரு கார் வழங்கப்பட்டுள்ளது. இந்த காரின் இயந்திரக் கொள்ளளவு 2500 C.C ஆகும். இந்த சலுகைகள் உழைக்கும் போதே செலுத்தும் வரி (PAYE) க்கு சரியாக கணிப்பிடப்பட்டு சேர்த்துக் கொள்ளப்படுகின்றது. இதன்படி செலுத்தப்பட்ட PAYE வரி ரூபா 425,000 ஆகும்.

திரு தயானந்த அங்கீகரிக்கப்பட்ட சேம இலாப நிதியத்திற்கு 8% பங்களிப்புச் செய்வதுடன் கம்பனி 12% பங்களிப்பு செய்கின்றது.

திரு தயானந்தாவுக்கு மூன்று வீடுகள் இருக்கின்றன. அவற்றின் விபரம் வருமாறு :

| அமைவிடம் | ஆண்டுப்பெறுமதி ரூபா | வீதவரி % | கட்டிமுடிக்கப்பட்ட வருடம் | தளபரப்பு (ச.அடி) |
|---|---|---|---|---|
| கொழும்பு | 60,000 | 36 % | 2000 | 2500 |
| கண்டி | 180,000 | 20 % | 1998 | 1500 |
| நுவரெலியா | 48,000 | 10 % | 2007 | 1200 |

கொழும்பில் உள்ள வீடு மாதம் ஒன்றுக்கு ரூபா 40,000 க்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது.

கண்டியில் உள்ள வீட்டினை நண்பர் ஒருவருக்கு வாடகைக்குக் கொடுத்துள்ளார். வாடகையாக மாதமொன்றுக்கு ரூபா 12,000 பெறப்படுகின்றது.

நுவரெலியாவில் உள்ள வீட்டடில் திரு தயானந்தாவின் பெற்றோர் வசிக்கின்றனர்.

திரு தயானந்த அவ்வப்போது தேவையான திருத்த வேலைகளை மேற்கொள்வார்.

திரு தயானந்த பணிப்பாளராகக் கடமையாற்றும் அதேவேளை ஒரு சிறந்த திரைப்பட கலைஞராகவும் தனது ஓய்வு நேரத்தில் ஈடுபடுவது வழக்கமாகும். அண்மையில் அவர் ஒரு திரைப்படமொன்றை எடுத்துள்ளார். ரஷ்யாவில் நடைபெற்ற சர்வதேசத் திரைப்பட விழாவுக்கு இத்திரைப்படம் தெரிவு செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இத்திரைப்படம் தொடர்பாக தனிப்பட்ட செலவினங்களின் விபரம் வருமாறு :

| செலவு ஏற்பட்ட வருடம் | ரூபா |
|---|---|
| 2007 / 2008 | 30,00,000 |
| 2008 / 2009 | 40,00,000 |
| 2009 / 2010 | 60,00,000 |

திரரைப்படம் 2009 ஜுலை மாதம் பூரணப்படுத்தப்பட்டது. திரைப்பட வருமானமாக ரூபா 20 மில்லியன் பெறப்பட்டது. திரைப்பட விழா விளம்பரச் செலவாக ரூபா 02 மில்லியன் ஏற்பட்டது. இது 2009 / 2010 ஆண்டுக்கான செலவில் உள்ளடக்கப்பட்டுள்ளது. மேலும் திரைப்படத் துறைக்கென கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் கார் ரூபா 42,00,000 செலவில் 01.01.2007 ல் கொள்வனவு செய்யப்பட்டது. இதற்கு வருடாந்தம் 10 % பெறுமானத் தேய்வு செய்யப்படுகின்றது.

மேலும் திரைப்படத் துறையில் பயன்படுத்துவதற்கென புதிய இயந்திரம் ஒன்று 01.01.2008 ல் ரூபா 20,00,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்டது.

01.05.2008 ல் பழைய மோட்டார் காரினை ரூபா 20,00,000 க்கு விற்பனை செய்து அதே தினம் பதிலீடாக புதிய வான் ஒன்று ரூபா 4500,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த வரி மதிப்பு ஆண்டில் திரு தயானந்த அனர்த்த நிவாரண வேலைகளுக்கு பயன்படுத்துவதற்கென இரண்டு ELF லொறிகளை ரூபா 15,00,000 (ஒன்றின் விலை) கொள்வனவு செய்து கம்பஹா நகர சபைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார். மேலும் கொழும்பில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட அனாதைகள் மற்றும் அங்கவீனர்களுக்கான தர்மஸ்தாபனத்திற்கு ரூபா 15,000 பெறுமதியான அரிசியினையும் ரூபா 20,000 பெறுமதியான பால்மா பக்கட்டுகளையும் நன்கொடையாக வழங்கியுள்ளார்.

வரி மதிப்பு ஆண்டு 2009 / 2010 யை அடிப்படையாகக் கொண்டு, திரு தயானந்த செலுத்த வேண்டிய வருமான வரியை கணிப்பிடுக.

(45 புள்ளிகள்)

03. திரு சிறிதரன் பின்வரும் இலாபங்களை வரி மதிப்பு ஆண்டு 2009/10 ல் பெறுகின்றார்.

| வட்டி வருமானம் | ரூபா |
|---|---|
| BOC | 90000 (தேறியது) |
| HSBC | 45000 (தேறியது) |
| Seylan | 48000 |

இதற்கு மேலதிகமாக நிதிக்கம்பனியாக பதிவு செய்யப்படாத நிறுவனம் ஒன்றில் திரு சிறிதரன் பின்வரும் வைப்புகளை மேற்கொண்டுள்ளார். குறித்த நிதிக் கம்பனியின் பணிப்பாளர் சபை வைப்பு செய்தவர்களை ஏமாற்றி விட்டு நாட்டை விட்டு வெளியேறியுள்ளார். பெறப்படவுள்ள, பெற்ற வட்டி விபரங்கள் வருமாறு :

| வைப்புச் செய்த தொகை | காலம் | வட்டி வீதம் வருடத்திற்கு | வட்டி செலுத்தும முறை |
|---|---|---|---|
| 10,00,000 | 01.09.2008 – 30.09.2009 | 27 % | மாதாந்தம் |
| 500,000 | 01.04.2009 – 30.09.2010 | 30 % | முதிர்வின்போது |

01.07.2009 இலிருந்து வட்டி நிலுவையாக உள்ளது.

திரு. சிறிதரனின் பங்கு விற்பனை விபரம் வருமாறு.

| கம்பனி பெயர் | கம்பனியின் தன்மை | ஒன்று கொள்வனவு விலை (ரூபா) | பங்குகளின் எண்ணிக்கை | கொள்வனவு த் திகதி | பங்கு ஒன்றின் விற்பனை விலை | விற்கப்பட்ட எண்ணிக்கை | விற்ற திகதி |
|---|---|---|---|---|---|---|---|
| XYZ | தனியார் கம்பனி | 100 / - | 500 | 01.09.2009 | 200/- | 500 | 01.03.2008 |
| BTL | தனியார் கம்பனி | 100 / - | 3000 | 01.06.2009 | 80/- | 3000 | 20.01.2010 |
| DTL | விலைகூறப்பட்ட கம்பனி | 100 / - | 3000 | 10.01.2010 | 220/- | 2000 | 10.03.2010 |

திரு. சிறிதரனின் பங்கு இலாப வருமானம் வருமாறு

| | ரூபா | ரூபா |
|---|---|---|
| ABC கம்பனி இலாபத்திலிருந்து | 125,000 | |
| விலக்கு அளிக்கப்பட்ட இலாபத்திலிருந்து | 25,000 | 150,000 |
| தேறிய பங்கிலாபம் விலைகூறப்பட்ட கம்பனி | | 50,000 |
| | | 200,000 |

திரு. சிறிதரன் வைத்தியராகக் கடமையாற்றும் போது பெறப்பட்ட இலாபங்கள் பின்வருமாறு.
திரு. சிறிதரனுக்கு 14 வயதுடைய மகனும், 10 வயதுடைய மகளும் உள்ளனர்.

| | |
|---|---|
| மாதாந்த சம்பளம் | 60,000 |
| மாதாந்த பிரயாணப்படி | 12,000 |
| பெற்ற வாடகை | 150,000 |
| (NPV ரூபா 7,500/- வீதவரி 30%) | |
| மகனின் வருமானம் (வட்டி) | 25,000 |
| விவசாய வருமானம் | 32,000 |

திரு. சிறிதரன் அரசாங்க வைத்தியசாலையில் ரூபா 350,000/- இனை சம்பளமாகக் பெறுகின்றார்.

| | |
|---|---|
| திரு. சிறிதரன் அரசாங்கத்திற்கு நன்கொடையாகக் கொடுத்தது | 10,000 |
| டவர் ஹோல் நிதியம் | 12,000 |
| அனாதை இல்லம் | 7,000 |
| கதிர்காமக் கோயில் நன்கொடை | 10,000 |

திரு. சிறிதரனின் வரிமதிப்பாண்டு 2009 / 2010 க்கான வரிவரவினைக் கணிப்பிடுக.

(20 புள்ளிகள்)

04. பின்வருவனவற்றைப் பற்றி சிறுகுறிப்பெழுதுக.

(அ) தகைமைக் கொடுப்பனவு

(ஆ) பெறுமதி சேர்வரி (VAT)

(இ) வரியிலிருந்து தப்பித்துக்கொள்ளல் (Tax Evasion), வரித்தவிர்ப்பு (Tax Avoidance)

(15 புள்ளிகள்)

***